2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று (6-2-81) பகல் சுமார் 11 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக்கொள்ளும் நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் புரிந்துள்ளார் என்று அவை கருதுகிறது. அவருக்கு பார்வையாளர் மாடத்திற்கு வருவதற்கான அனுமதி சீட்டு வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்.

6. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர் மீது நடவடிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :—

'' இன்று (6-2-1981) பகல் சுமார் 11-00 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், கீழ்க்கபிஸ்தலத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, 9 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிப்பவருமான திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவரது இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டு என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமக்கு பிரீசிடெண்ட் இருக்கிறது. 7 நாள் என்பது மிகவும் அதிகம். 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......